# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
# முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
# முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
# அ.வ.எண். 205/2015

2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 3 ம் நாள் திங்கட்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10 வது விதி 4 ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

வா.சா.1. சண்முகம்.

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. என்து பெற்றோருக்கு கமலா, கோவிந்தசாமி, ஜெயம்மாள், முனியம்மாள், ஜீவரத்தினம், நான் சண்முகம், கோதண்டபாணி ஆகிய 7 குழந்தைகள். நான் மட்டும்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வேறு யாரையும் தரப்பினராக சேர்க்கவில்லை. எனது குடும்பத்திற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் வழக்கு சொத்துக்களை தவிர வேறு சொத்துக்களும் உள்ளது. பூர்வீக சொத்துகளை 12.05.2008 ல் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான். அது பதிவு செய்யப்பட்ட ஆவணம்தான். அந்த பாகப்பிரினை பத்திரத்தில் என்னை 2 வது நபராக காண்பித்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் எனக்கு பி அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து தவிர வேறு சொத்துகளும் சேர்த்து என்னுடைய பி அட்டவணை சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த பாகப்பிரிவினை பத்திரம் இந்த வழக்கிற்கு முன்பே பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு ஞாபம் இல்லை. நான் எனது பாக

சொத்துக்களை விற்கவில்லை. பாகப்பிரிவினைக்கு பின்னர் தனி தனியாக பாக சொத்துக்களை அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். மொத்த சொத்துக்களும் கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாக நான் மதிப்பீடு செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல.

2. எனக்கு 1/5 பாகம் கேட்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. என்னுடன் பிறந்தவர்களை வழக்கின் தரப்பினர்களாக சேர்க்காதது தவறு என்றால் சரியல்ல. உண்மைக்கு புறம்பான தகவல்களை கூறியுள்ளதாலும் அவசியமான தரப்பினர்களை சேர்க்காததாலும் வழக்கு சரியான முறையில் மதிப்பீடு செய்யாததாலும் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி.